முத்தரசி

கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்

VOLUME : 1 ISSUE : 1 AUG- 2023

2023

# குலசேகர ஆழ்வாரின் பக்தித்திறன்

**பேரா. இரா.இரா. குபேந்திரன்**

**தமிழ்த்துறை, சௌராஷ்டிரக் கல்லூரி, மதுரை-4.**

******************************************************

**முன்னுரை :** திருமாலை முழு முதற்கடவுளாக ஏற்று வழிபடுபவர்களை வைணவர்கள் என்றழைப்பர். திருமாலைப் பாடிப் பரவிய அடியவர்களை ஆழ்வார்கள் என்றழைப்பர். **“ஆழ்வார்கள் என்பதன் பொருள் இறைவனது குணங்களின் ஆழ்ந்து ஈடுபாடு கொள்பவர்கள்.”**[1] என்று முனைவர் ச. சுபாஷ் சந்திர போஸ் கூறுவது இங்கு ஒப்புநோக்கத்தக்கது. அவ்வகையில் திருமாலைக் குறித்துப் பாடிய பாடல்கள் நான்காயிரமாகும். அத்தொகுப்பை நாலாயிரத் திவ்விய பிரபந்தம் என்றழைக்கப்படுகிறது. சேர நாட்டரசன் குலசேகர ஆழ்வார் பாடல்களில் இடம்பெறும் வழிபாட்டுநெறி குறித்து இவ்வாய்வுக் கட்டுரை விளக்குகிறது.

**குலசேகர ஆழ்வாரின் பிறப்பு** : இயற்கை வளமிக்க சேர நாட்டில் வஞ்சிக்களம் நகரை ஆண்ட **“திடவிரதன் என்னும் திருமால் அடியார்க்கு மகனாகப் பிறந்தார் குலசேகர ஆழ்வார்.”**[2] குலசேகர ஆழ்வார் இளமையிலயே பல்வித கலைகளைக் கற்றுத்தேர்ந்தார். எனவே திடவிரதன் குலசேகர ஆழ்வார்க்கு முடிசூட்டி மகிழ்ந்தார். நால்வகைப் படையோடு எதிரிகளும் வியக்கும் வகையில் சிறந்த முறையில் ஆட்சி புரிந்து வந்தார் குலசேகர ஆழ்வார்.

**அரங்கன் மீது ஏக்கம்** : குலசேகர ஆழ்வார் நல்லாட்சி புரிந்து வரும் வேளையில் திருமாலின் பெருமைகளை அறிகிறார். திருவரங்கம் சென்று திருவரங்கனைக் காண ஏங்குவதாக பின்வரும் பாடல் நமக்கு சான்று பகர்கின்றது.

**“இருவிரியர்ச் சுடர்மணிகள் இமைக்கும் நெற்றி இனத்துத்தி யணிபணம் ஆயிரங்களார்ந்த**

**அரவரசுப் பெருஞ்சோதி அனந்தமென்னும் அணிவிளங்கும் உயர் வெள்ளையணையை மேவித்**

**திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி திரைக்கையால் அடிவருடப் பள்ளி கொள்ளும்**

**கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டு என் கண்ணிணைகள் என்று கொலோ களிக்கும்**

**நாளோ?”** [3]

என்று பாடுவதன் மூலம் ஆதிசேஷனாகிய வெண்படுக்கையின் மேல் பள்ளி கொண்டிருக்கும் ஸ்ரீரங்கநாதனை, காவிரி நதி பாயும் திருவரங்கம் என்னும் நகரில் குடி கொண்டிலங்கும் இறைவனை கண்ணாரக் கண்டு களிக்கும் நாள் எந்நாளோ? என ஏக்கப் பெருமூச்சு விடுகிறார் குலசேகர ஆழ்வார்.

SAMPLE

முத்தரசி
முத்தரசி
கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME : 1 ISSUE : 1 AUG- 2023
2023

**அரங்கன் மீது மையல்** : குலசேகர ஆழ்வார் தன்னுடைய மூன்றாம் திருமொழியில் அரங்கன் மீது அளவற்ற காதலால் பித்தானதாகப் பின்வருமாறு பாடுகிறார்.

**"தீதில் நன்னெறி நிற்க அல்லாது செய்**
**நீதி யாரோடும் கூடுவதில்லை யான்**
**ஆதி ஆயன் அரங்கன் அந்தாமரைப்**
**பேதையா மணவாளன்றன் பித்தனே"** [4]

என்று பாடுவதன் மூலம் குற்றமற்ற நல்ல வழிகள் இருக்க, அவற்றிற்கு மாறான வழிகளில் செல்லும் அநீதியாளர்களோடு நான் சேர்வதில்லை. உலகங்களுக்கெல்லாம் முதல்வனான ஆயர்குலத்தில் ஸ்ரீகிருஷ்ணனாக அவதரித்தவனான, தாமரைச் செல்வி மகாலெட்சுமியின் மணாளானான ஸ்ரீரங்கநதானின் அழகில் பித்தாகி நிற்கிறேன்.

**தன்னை மறத்தல் :** பக்திநெறியில் தன்னை மறத்தலே அனந்த நிலை என்பர். அவ்வகையில் திருமால் மீது கொண்ட பற்றின் காரணமாகத் தன்னையே மறந்த இழந்த குலசேகர ஆழ்வார். தன்னுடைய நாட்டைப் பற்றியோ. அரச வாழ்வைப் பற்றியோ சிந்தனை செய்யாமல் திருமாலின் நினைவாகவே வாழத் தொடங்கினார். இராமாயணத்தில் பெரும் ஈடுபாடு கொண்ட குலசேகர ஆழ்வார் இராமாயணக் கதையைக் கேட்கும் போது பித்துப் பிடித்தது போல புலம்புகிறார். ஆம். கரன் என்னும் அரக்கன் மலை போல வந்து இராமனை எதிர்க்கிறான். இராமன் தனியாக இருப்பது கண்டு இராமனுக்குத் துணையாக குலசேகர ஆழ்வார் போருக்குக் செல்லத் தயாராகிறார். அமைச்சர்கள் கதை கூறும் பாகவதரிடம் கூறி கரன் இறந்துபட்டதாகக் கதை சொல்லி முடிக்க வைக்கிறார்கள். இவ்வாறு குலசேகர ஆழ்வார் குறித்துப் பற்பல செவிவழிக் கதைகள் சொல்லப்படுகின்றன.

**அரசு பற்றகலல் :**திருமால் மீது பற்று கொண்ட குலசேகர ஆழ்வார் பூலோக வைகுண்டம் என்றழைக்கப்படும் திருவேங்கடத்தான் மீது கொண்ட அளவற்ற பற்றின் காரணமாக திருவேங்கட மலையில் குருகாய்(நாரையாய்), மீனாய், தம்பலப் படிக்கம் எனப்படும் பொன்வட்டில் ஏந்துபவனாய், சென்பகமாய் (சென்பகமராமய்-மலராக), தம்பமாய், புதராய், திருவேங்கடமலையின் சிகரமாய், காட்டாறாய், திருவேங்கடமலைக்குச் செல்லக் கூடிய வழியாய், வேங்கடத்தானைக் கண்டு கொண்டே இருக்கும் படியாய் கிடக்க வேண்டுமென்று பட்டியலிடுகிறார் குலசேகர ஆழ்வார். திருவேங்கடத்தில் ஏதேனும் ஒன்றாகப் பிறக்க வேண்டுமென்று

தன்னுடைய விருப்பத்தைக் குலசேகர ஆழ்வார் தன்னுடைய பெருமாள் திருமொழியில் (நான்காம் திருமொழியில்) பின்வருமாறு பாடியுள்ளார்.

**"உம்பர் உலகாண்டு ஒரு குடைக்கீழ் உருப்பசிதன்**

**அம்பொற் கலையல்குல் பெற்றாலும் ஆதரியேன்**

**செம்பவள வாயான் திருவேங்கட மென்னும்**

**எம்பெருமான் பொன் மலைமேல் ஏதேனுமாவேனே"** [5]

**சரணாகதி :** குலசேகர ஆழ்வார் அரசகுலத்தில் பிறந்திருந்தாலும் திருமாலே கதி என்னும் சரணாகதி என்னும் வைணவ தத்துவத்தில் வாழ்ந்தவர் என்பதை அவருடைய பாடல்களே சான்றுகள் கூறும். வித்துவக்கோடு என்னும் திருத்தலத்தில் குடி கொண்டுள்ள திருமாலைக் குறித்து உலகியல் கருத்துக்களோடு பாடல்கள் அமைத்துள்ளார் குலசேகர ஆழ்வார். தாயானவள் எவ்வளவு தான் குழந்தையை அடித்துத் துரத்தினாலும் அக்குழந்தை தன் தாயை விட்டு அகலாது அழுது கொண்டே இருக்கும். அது போல இறைவனே நீ என்னை எவ்வளவு சோதித்தாலும் நான் உன்னை விட்டு அகலமாட்டேன் என்பதை,

**"அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவள்தன்**

**அருள் நினைந்தே அழுங்குழவி, அதுவே போன்றிருந்தேனே"**[6]

ஓர் நாட்டு அரசன் தன்னுடைய மக்களை எவ்வளவு துன்பறுத்தினாலும் அந்நாட்டு மக்கள் அவ்வரசனின் கருணையை எதிர்நோக்கியே வாழ்வார்கள். அது போல கருணைக்கடலான திருமாலே! என்னை எவ்வளவு சோதித்தாலும் நான் உன் கருணை ஒன்றையே எதிர்பார்த்து நிற்கின்றேன் என்பதை,

**" … ….எத்துயரஞ் செய்திடினும் தார் வேந்தன்**

**கோன் நோக்கி வாழும் குடிபோன்றிருந்தேனே"** [7]

உலகத்து உயிர்களைக் காக்கும் தொழிலை மேற் கொள்பவனாக விளங்குகிறான் என்னும் செய்தியைக் குலசேகர ஆழ்வார், முற்காலத்தில் புண்ணை சரி செய்வதற்காக பழுக்கக் காய்ச்சிய கம்பியையோ, கத்தியையோ மருத்துவன் சுடச் செய்து மருத்துவம் செய்வான். தன்னை நெருப்பால் சுட்டு துன்புறுத்திய அந்த நோயாளி அம்மருத்துவன் எக்கோபமும் கொள்ளாது தாங்கிக் கொள்வான். அது போல இறைவனே நீ எனக்கு எத்தகைய துன்பம் கொடுத்தாலும் அத்துன்பத்தைத் தாங்கிக் கொண்டு உன் கருணையை நோக்கியே நான் இருப்பேன்.



SAMPLE

முத்தரசி
கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
2023
VOLUME : 1 ISSUE : 1 AUG- 2023

**"வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்**
**மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்**
**மீளாத துயர் தரினும் விற்றுவக் கோட்டம்மா! நீ**
**ஆளா உனதருளே பார்ப்பான் அடியேனே"** [8]

ஏன்று பாடுவதன் மூலம் குலசேகர ஆழ்வாரின் பக்தித்திறனை நாமறிய முடிகிறது. மேலும் நெருப்பே ஆனாலும் தாமரையை மலா வைக்க முடியாது. சூரிய ஒளியின் மூலம் தாமரை மலர்வது போல திருமாலைத் தவிர வேறு எவராலும் குலசேகர ஆழ்வாரின் உள்ளம் வணங்காது என்றும், ஆறுகள் அளவில் பெரிதாகவும், விரிவாகவும் இருந்தாலும் இறுதியில் கடலைத் தவிர வேறு எங்கும் செல்ல முடியாது. அது போல திருமாலைத் தவிர வேறு யாரையும் தன் மனம் நாடாது என்கிறார். மரஞ்செடி கொடிகள் வான்மழையை எதிர்பார்த்து நிற்பது போல் இறைவனின்ன் கருணையை எதிர்நோக்கி உள்ளதாக திருமாலைப் பார்த்து குலசேகர ஆழ்வார் கூறுகிறார்.

**தாலாட்டு :** தாலாட்டு என்னும் பிரித்தால் சொல்லை தால் + ஆட்டு எனப்பிரிக்கலாம். இங்கு தால் என்பது நாக்கு என்று பொருள்படும். நாக்கை ஆட்டி எழுப்பும் ஒலியும் பாடலுமே தாலாட்டுப்பாடல் எனப்படுகிறது. சிற்றிலக்கிய வகைகள் பிள்ளைத்தமிழ் ஒன்றாகும் அப்பிள்ளைத்தமிழின் இரண்டாம் பருவமான தாலப்பருவத்தின் அமைப்புடன் பெரியாழ்வாரைப் போன்று குலசேகர ஆழ்வாரும் பாடியுள்ளார். பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாக பாவித்துப் பாட, குலசேகர ஆழ்வாரோ இராமனைக் குழந்தையாக பாவித்துப் பாடியுள்ளார்.

**"தேவரையும் அசுரரையும் திசைகளையும் படைத்தவனே!**
**யாவரும் வந்தடி அரங்கநகர்த் துயின்றவனே!**
**காவிரிநல் நதிபாயும் கணபரத்தென் கருமணியே!**
**ஏவரிவெஞ் சிலைவலவா! இராகவனே! தாலேலோ"** [9]

ஏன்னும் பாடல்வரிகள் வில்லேந்திய வீரனான இராமனைத் தாலாட்டு வகையில் அமைந்துள்ளதல்லவா?

**அடியார்களைப் போற்றுதல் :** குலசேகர ஆழ்வார் அரசகுலத்தில் பிறந்தவராயினும் திருமாலடியார்களின் பெருமை உணர்ந்தவராக, அவர்களைப் போற்றிப் பாடும் வகையில் பெருமாள் திருமொழியில் (இரண்டாம் திருமொழி)



SAMPLE

முத்தரசி
கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME : 1 ISSUE : 1 AUG- 2023
2023

அமைந்துள்ளதெனலாம். அரங்கனைப் பாடிப் பரவும் அடியார்களைக் காண்பதே பாக்கியத்திலும் பாக்கியம் என்றும், அடியார்கள் அரங்கனின் பெருமையைப் பாடி ஆடிய பாதத்துகள்களில் புரள்வதே பாக்கியம் என்றும், அது கங்கையில் குளிப்பதை விட பனிதமானது என்று குலசேகர ஆழ்வார் பாடுகின்றார். மேலும்,

**"மாலையுற்ற கடல் கிடந்தவன் வண்டு கிண்டு நறுந்துழாய்**

**மாலையுற்ற வரைப்பெருந்திரு மார்வனை மலர்க்கண்ணனை**

**மாலையுற்று எழுந்து ஆடிப்பாடித் திரிந்தரங்கன் எம்மானுக்கே**

**மாலையுற்றிடும் தொண்டர் வாழ்வுக்கு மாலையுற்றது என்நெஞ்சம்"** [10]

என்று பாடுவதன் மூலம் திருமாலை வழிபடும் அடியார்களான பாகவாத கைங்கரியம் புரிபவர்களின் வாழ்க்கைமுறை குறித்து விளக்குகிறார். அதாவது, அலைவீசும் திருப்பாற்கடலில் பள்ளிகொள்பவனும், நறுந்தேன் மிக்க துளசி மாலை அணிந்த பெரிய திருமார்பை உடையவனும், செந்தாமரைமலர் போன்ற விழிகளைக் கொண்டவனுமான ஸ்ரீரங்கநாதன் மேல் மையல் கொண்டு ஆடிப்பாடி, திரிந்து, அவன் புகழ்பரப்பிய பாகவத அடியார்களுடைய வாழ்க்கைமுறை என் மனத்தை ஈர்க்கின்றது என்று குலசேகர ஆழ்வார் கூறுகின்றார்.

**முடிவுரை :** காலந்தோறும் தமிழ் இலக்கியம் புதிய புதிய கருத்துக்களைத் தமிழ் சமுதாயத்திற்கு வழங்கி வந்துள்ளது. அவ்வகையில் …. நூற்றாண்டில் பக்தி இயக்கம் தோன்றி தமிழக மக்களை வழி நடத்தியது எனலாம். நாயன்மார்கள் சைவசமயத்தோடு சைவ இலக்கியங்களை வளர்த்தது போன்று ஆழ்வார்கள் வைணவ சமயத்தோடு வைணவ இலக்கியங்களை வளர்த்தனர். நாலயிர திவ்ய பிரபந்தத்தில் காணலாகும் நாலாயிரம் பாடல்கள் நான்கு வேதத்தின் சாரம்சமாகும் என்று கூறுவர். குலசேகர ஆழ்வாரின் பக்திப்பாடல்கள் திருமாலின் பெருமையையும் பாகவத அடியார்களின் பெருமைகளையும் விளக்கும் வகையில் அமைந்துள்ளதெனலாம்.

குறிப்புகள்

1.தமிழ் இலக்கிய வரலாறு, முனைவர் சு. சுபாஷ் சந்திரபோஸ், பக்-147. பாவை பப்ளிகேஷன்ஸ், 142,ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை-600 014.

2. மேலது. பக்-147, பாடல் எண்.

3.ஸ்ரீ நாலாயிரத் திவ்விய பிரபந்தம் (முதலாயிரம்), குலசேகர ஆழ்வார் பெருமாள் திருமொழி- முதல் திருமொழி,பாடல்-1., கங்கை புத்தக நிலையம், 23, தீனதாயளு தெரு, தியாகராயநகர், சென்னை-17.

4. மேலது. பக்..272 பாடல் எண்-672.

5. மேலது. பக்.277. பாடல் எண்-686.

6. மேலது. பக்.278. பாடல் எண்-688. .
7. மேலது. பக்.279. பாடல் எண்-690
8. மேலது. பக்.279. பாடல் எண்-691
9. மேலது. பக்.297. பாடல் எண்-728
10 மேலது. பக்.270. பாடல் எண்-665

SAMPLE